# பெரியாரியக்கம்

பகுத்தறிவாளர் கழகம், தஞ்சாவூர் NEWS LETTER

(பதிவு எண் 28/74) செய்தி மடல் உறுப்பினர்கட்கு மட்டும்

தொகுப்பு 1 பெரியாராண்டு 108 - உண்மை - புரட்சி ஏப்ரல்'87 மடல் எண் 3

## காக்கி சட்டைகளுக்குள்ளேயும் சில கருப்புச் சட்டைகள்

தோழர்கட்கு,

வணக்கம், பழுத்த சுயமரியாதை வீரர் 'ஃபைவ் நைன்ட்டி ஃபைவ் பாலகிருட்டிணன்' (12—3—87 ல்) இயற்கை அடைந்தார். காவல் துறையில் 'ரிசர்வ்' எனப்படும் சேமப்படையில் தமது 55வது வயது வரை அரும்பணியாற்றி, ஓய்வு பெற்று, பின்னர் 29 ஆண்டுகள் கழித்து தமது 84-ம் வயதில் தஞ்சையில் இயற்கை அடைந்தார். தோழர் பாலகிருட்டிணன் தனது இளவல் மேனாள் அமைச்சர் இராகவானந்தம் அவர்களின் புதல்வர்கட்கு, ஈரோடு, விடுதலை, குடியரசு என்று பெயர் சூட்டியதிலிருந்தே அந்த சுயமரியாதை சுடரொளியின் ஆழ்ந்த கொள்கைப்பிடிப்பு விளங்கும். காக்கி சட்டை போட்டுக் கொண்டு தந்தை பெரியார் அவர்களுக்கு பாதுகாப்புக்கு சென்ற காவலர் பாலகிருட்டிணன், கருஞ்சட்டை போட்டுக் கொண்ட சுயமரியாதைக்காரராகத் திரும்பினார். காக்கி சட்டைக்குள்ளே ஓர் கருப்பு சட்டையாக கடமையாற்றி வந்தார். போட்ட கருப்புச்சட்டையையும் ஏற்ற கொள்கையையும் தனது இறுதி மூச்சுவரை கடைபிடித்து நின்ற அந்த பெருமகனுக்கு வீர வணக்கம் செலுத்தினோம். தஞ்சை நகர் மன்றத் தலைவர் திரு ஏ. வி. ப்தி அவர்கள், தேர்ந்த சுயமரியாதை இயக்கத்தோழர் இரா. இராசகோபாலன் அவர்கள் பகுத்தறிவாளர் கழகத் தலைவர் ஆகியோர் (13—3—87) இறுதி ஊர்வலத்தில் கலந்து மரியாதை செய்தனர்.

மற்றுமொரு சுயமரியாதைத் தோழர். இவரும் காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பெரியவர் இராசரத்தினம் அவர்கள் 15—3—87 ல் இயற்கை அடைந்தார். பெயர் சொன்னால் தெரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு இயக்க உணர்வுடன் வாழ்ந்தவர். பிறப்பால் கிறித்துவரான இத்தோழர் தனது மறைவுக்குப் பின் எவ்விதமான சமயச்சடங்குகளும் இடம் பெறலாகாது என்று அறிவித்தவர். அதற்கேற்ப தோழர்கள் ஏற்பாடுகளை செய்தனர். திராவிடர் கழக கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் இறுதி ஊர்வலம் நடந்தது. இறுதி ஊர்வலத்தில் கரந்தை புலவர் கல்லூரி முதல்வர் திரு பி. விருத்தாசலம் அவர்களும், பகுத்தறிவாளர் கழக செயலாளரும் மற்றும் பல பகுத்தறிவாளர் கழகத் தோழர்களும் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

இவர்கள் முதுமையுற்று இயற்கை அடைந்தவர்கள் தான். எனினும் இயற்கை அடைதல் இரங்கலுக்குரியதாகவே அமைகிறது. மேலும் எண்ணத்தக்கவர்களாய் வாழ்ந்து மறைந்தவர்களெனில் இதயம் கனக்கத்தான் செய்கிறது.

"எங்கள் எண்ணத்தில் நிறைந்த பெருமக்களே, உங்கள் வழியில் எங்கள் பயணத்தை உறுதியுடன் தொடருவோம். அஃதொன்றே தங்களைப் போன்றோருக்குச் செலுத்தும் தகுதி மிக்க மரியாதையாக அமையும் என்று கருதுகிறோம்" என்று உறுதி எடுத்துக்கொண்டு பணியினைத் தொடருவோம்.

தோழமையுடன்
*பகுத்தறிவாளர் கழகம்*
தஞ்சாவூர்.

# கோடையில் குழந்தைப் பாதுகாப்பு

1. காலையிலும், மாலையிலும் குளிர்ந்த நீரில் குளிப்பாட்டுங்கள்.
2. மெல்லிய பருத்தி ஆடைகளையே அணிவியுங்கள்
3. காலை 8.30 மணி வரையும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் விளையாட அனுமதியுங்கள்.
4. பனிநீர் அல்லது குளிரூட்டப்பட்ட எதனையும் அருந்திட அனுமதிக்காதீர்கவ்.
5. பழச்சாறுகள், கொதிக்க வைத்து பின் ஆறிய நீர், புளிக்காத மோர், இளநீர் போன்றவற்றை மிகுதியாக வழங்குங்கள்.
6. 'ஏர்-கன்டிசன்ட்' அரங்கங்களுக்கு அழைத்துப் போகாதீர்கள்.
7. திருவிழாக் கூட்டம், ஈ மொய்க்கும் பண்டம் இவைகளை தவிர்த்திடுங்கள்.
8. 'பழையது' சாப்பிடுவதால் குறிப்பிடத்தக்க பயன் ஏதுமில்லை. மிகவும் புளித்துப் போனால் வயிற்றுப் போக்கு ஏற்படும் வாய்ப்பு உண்டு என்பதை நினைவிலிருத்துங்கள்.
9. பச்சை காய்கறிகளை மிகுதியாக வழங்குங்கள்.
10. நீர்க்கடுப்பு எனப்படும் (சிறுநீர் அடிக்கடிஎரிச்சலுடனும் கடுப்புடனும் செல்லுதல்) தொந்தரவுக்கு, சாப்பாட்டு உப்பை நீரில் கரைத்து அருந்த கொடுங்கள்.



*எவ்வளவுதான் திறமைசாலி என்றாலும்*
*தீமையான மனிதனைப் புத்திசாலி*
*என்று கூறுவது சரியாகாது*

**—பெஞ்சமின் பிராங்க்ளின்**

நூலக வரிசை—1

# சரசுவதி மகால் நூலகம்

உலகில் உள்ள மிகத்தொன்மையான நூலகங்களுல் தஞ்சாவூர்சரசுவதி மகால் நூலகமும் ஒன்றாகக் கருதப்படுகிறது. 'என்சைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா இந்தியாவிலேயே குறிப்பிடத்தக்க நூலகம் என்று கூறுகிறது.

**வரலாறு :** சோழர் காலத்துக்குப் பின்னர் ஆந்திர நாயக்க மன்னரான அச்சுராயர் ஆட்சியின் கீழ் தஞ்சையிருந்தது. 1535 ல் அச்சுராயர் மறைவிற்குப் பின் அவரது பிரதிநிதியாக சேவப்ப நாயக்கர் முதல் நாயக்க மன்னராகப் பதவியேற்றார். இவரது மகன் ரகுநாத நாயக்கரும், பேரன்களான விஜயராகவ நாயக்கரும் ஆட்சி செய்தனர். இவர்கள் காலத்திலேயே தஞ்சைப் பெரிய கோவிலைச் சுற்றியுள்ள சேவப்ப நாயக்கர் அரண்மனை (சின்ன அரண்மனை)யும், நகரின் நடுவேயமைந்துள்ள அரண்மனையும் கட்டப்பட்டன இம்மன்னர்கள் அறிவுத்திறம் மிக்கவர்களாகக் காணப்பட்டனர். தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளில் இவ்வரசர்களன்றி அவர்தம் குடும்பத்தினரும் கூட பல நூல்களைப் படைத்தளித்தனர். இவற்றைத் தொகுத்து குடும்ப நூலகமொன்று-'பாண்டாக்ரகம்'-அரண்மனையில் நிறுவப்பெற்றது. அஃதே இன்றைய சரசுவதி மகால் நூலகத்தின் துவக்க வடிவமாகும்.

(கி. பி. 1675-1855) நாயக்கர் ஆட்சியைத் தொடர்ந்த மராட்டியராட்சி சிவாஜியின் தமையனான ஏகோஜி என்ற வெங்காஜி முதல் மராட்டிய மன்னன். இவ் வரிசையில் குறிக்கத் தக்கவர் சரபோசி மன்னராவார்.

பல அறிஞர்களை காசி பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி அரிய பல நூல்களைப் படியெடுத்து வருமாறு செய்தும், 5000க்கும் மேற்பட்ட பிரெஞ்சு, ஆங்கில, செருமானிய நூல்களைத் தாமே திரட்டித் தொகுத்தும் இந்நூலகத்தை விரிவாக்கினார்.

1912 : இரண்டாம் சிவாஜியின் கடைசி அரசி மறைந்தவுடன் 'சொத்துச் சண்டை' யில் நூலகம் அறமன்றப் பொறுப்பின் கீழ் வந்தது.

---

# இன்னுமா உறக்கம்?

அமெரிக்கா நாட்டில் நீதிபதி டிக்கி என்பார் தம் நண்பரொருவருடன் விடுதியொன்றில் தங்கியிருந்தார். உரையாடல், அமெரிக்க அரசியல் சட்டத்தைப் பற்றியதாகத் திரும்பியது. 'அடிமை நிலையை அனுமதிக்கும் அரசியல் சட்டம் மாற்றப்படக் கூடாது' என வாதிட்டார் நீதிபதி டிக்கி. அவரது நண்பர் 'மாற்றியே தீர வேண்டும்' என்று பேசினார். உரையாடியபடியே உறங்கப் போயினர். மறுநாட்காலை நீதிபதி கண் விழித்தார். 'காலை வணக்கம்' கூற வேண்டிய நண்பரோ முந்தைய இரவு உரையாடலின் தொடர்ச்சியாக 'நண்பரே, இந்நாடு பாதி விடுதலை பெற்றதாகவும், பிறிதொரு பாதி அடிமையாகவும் இருத்தலியலாது' என்றுரைத்தார். நீதிபதி 'என்ன இன்னுமா உறங்கவில்லை, படுத்து உறங்குங்கள்' என்று வியந்தார். நீதிபதி டிக்கியின் நண்பர்தான் -நாட்டைப் பற்றி உறங்காமல் சிந்தித்தவர்தான்-பின்னாளில் அமெரிக்க குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கன்.

---

1918 : தஞ்சை மக்கள் வேண்டுகோளுக்கு இணங்க பொதுமக்கள் பயன்படுத்தும் நூலகமாக மாற்றப்பட்டது. தஞ்சை மாவட்ட ஆட்சியர், மாவட்ட அற மன்றத் தலைவர், அரசர் அல்லது அவரது பிரதிநிதி மற்றும் ஒரு செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவும், குழுவினரின் பொறுப்பில் உருபா ஓரிலக்கம் கொண்ட வைப்பு நிதியும் நூலகத்தைப் பேணும் பொருட்டு அனுமதிக்கப்பட்டன. நூற்றொகைப் பட்டியல், சுவடிப் பட்டியல் ஆகியன தயாரிக்க ஆங்கில அரசும் நிதி உதவி செய்தது.

1938 : மதிப்புச் செயலாளரான திரு. எஸ். கோபாலன் தமது மதிப்பூதியத்தி னின்றும் நூலகம் பற்றிய பருவ இதழொன்றினைத் துவக்கினார்.

1948 : அன்றைய தமிழக ஓமாந்தூர் ராமசாமி (ரெட்டி)யார் முயற்சியில் பல அரிய சுவடிகள் நூல் வடிவம் பெற்றன.

1983 : இந்நூலகம் இன்றியமையாத நாட்டுடமைகளிலொன்றெனக் கருதப் பெற்று 1986 - ல் பதிவும் பெற்றது. பதிவினைத் தொடர்ந்து மாநில கல்வி அமைச்சர் தலைவராகவும், மைய பண்பாட்டுத் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், மைய - மாநில கல்வி, நிதி மற்றும் சட்டப் பிரதிநிதிகளையும் பல அறிஞர்களையும் உறுப்பினர் களாகக் கொண்டுள்ளது. தனி இயக்குநர் நியமிக்கப்படும் வரை தஞ்சை மாவட்ட ஆட்சியரே அப்பொறுப்பினை செயற்படுத்துவார்.

## நூலக அமைப்பும், பணியும் :

தொகுத்தல் மற்றும் பாதுகாத்தல் ; நூல் வெளியீடு, ஆய்வு மாணாக்கருக்கு துணை செய்தல் நூலகத்தின் முதண்மைப் பணிகளாகும்.

காட்சிப் பிரிவு, நூல்கள் பிரிவு, சுவடிப் பிரிவு, பாதுகாப்பு மற்றும் நூற்கட்டுமானப் பிரிவு, நுண்படப் பிரிவு, அச்சகம் மற்றும் விற்பனைப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகளாக நூலகம் இயங்குகிறது.

காட்சிப் பிரிவில் சில அரிய ஓலைச் சுவடிகள் மற்றும் நூல்கள், தொன்மை மிக்க வண்ண ஓவியங்கள், குறிக்கத்தக்க சில 18 ம் நூற்றாண்டுக்கு முந்திய இந்திய வரைபடங்கள் ஆகியன காட்சிக்காக தொகுக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பார்வைக்கு இலவயமாகவும் அனுமதிக்கப் படுகிறது.

சுவடிப் பிரிவு : சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராத்தி மொழிச்சுவடிகள் 36,000 க்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ளன. சமஸ்கிருதச் சுவடிகள் கிரந்தம், தேவநாகரி, தெலுங்கு வரிவடிவங்களில் அமைந்துள்ளன, 3000 தமிழ்ச் சுவடிகள் உள்ளன. இச்சுவடிகள் இலக்கியம் மருத்துவம் எனும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

சரபோசி மன்னர் தமது 'தன்வந்திரி மகால்' வைத்திய சாலையில் தாமே பயன் படுத்திய பல அரிய சிகிச்சை முறைகளை இச்சுவடிகளில் எழுதி வைத்துள்ளார் என்பது குறிக்கத் தக்க செய்தியாகும்.

நுண்படப் பிரிவு : அரிய சுவடிகளைப் பாதுகாக்கும் பொருட்டும் எளிதில் கையாள வாய்ப்பாகவும் மிக நவீன ரக விலை மதிப்பு மிக்க செருமானிய நுண்படக் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. இத்தொன்மை மிக்க நூல்கள் நவீன முறையில் பாதுகாக்கப் படுகின்றன. காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நூலகம் இயங்கும். (மதியம் 1 - 2 உணவு இடை வேளையிலும் புதன் மற்றும் அரசு விடுமுறைகளிலும் நூலகம் இயங்காது)

1957 - ம் ஆண்டில் தான் உலகிலேயே அச்சுருப்பெற்ற முதல் நூலாக ''கட்டன்பர்க்ஸ் பைபிள்'' வெளிவந்தது. அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பெருகப் பெருக அவற்றின் முதுகிலேறிக் கொண்டும் சமயம், மற்றும் மூடநம்பிக்கைகள் வளர்க்கப் பட்டதுதான் மனிதகுல வரலாறு. அச்சுப் பொறியிலேயும் முதன் முதலாக 'பைபிள்' தான் வெளிவந்தது என்பதுடன் இதுகாறும் அச்சடிக்கப்பட்ட நூல்களிலேயே எதொன்றும் பைபிள் அளவுக்கு அச்சிடப்படவில்லை என்பதும் எண்ணிப் பார்க்கத் தக்கது.

இந்திய மொழிகளில் கிறித்துவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் ஆங்கிலத்துக்கு அடுத்த நிலையில் தெரிவு செய்யப்பட்ட மொழி தமிழேயாகும். 'DOCTRINA CHRISTAM' எனும் முதல் தமிழ்நூல் மரக்கட்டைகளில் செதுக்கப் பெற்ற தமிழ் அச்சுக்களைக் கொண்டு 1528 - ல் அச்சுருப் பெற்றது. இந்நூலின் படிகள் தமிழ் நாட்டிலோ அன்றி இந்தியாவிலோ எங்குமில்லை. அமெரிக்க ஹார்வர்டு பல்கலைக் கழகத்திலேதான் உள்ளது. அண்மையில் தமிழ்ப் பல்கலைக் கழத்தினர் பெரு முயற்சி மேற் கொண்டு அச்சுருப்பெற்ற முதல் தமிழ் நூலின் புகைப்படப் படியினை தமிழ்ப்பல்கலைக் கழக நூலகத்துக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

---

# அறிவுக்கு விடுதலை தா!

பெரியார்தம் பேரியக்கத்தின் நெடிய தொண்டுகளின் பெரும் பகுதியாகவும், அவர்தம் ஆழ்ந்த உள்ளக்கிடக்கையின் அரிய விளக்கமாகவும் இருந்துவந்திருக்கின்ற ஒரு வாசகம், 'அறிவுக்கு விடுதலை தா' என்பதாகும். நாட்டின் கலை கலாச்சாரம், அரசியல், மதம், கல்வி ஆகிய அத்தனையையும் வைத்து உரசிப்பார்க்கும் உரை கல்லாக ஆக்கும்படி தந்தை பெரியார் அவர்கள் மனிதசமுதாயத்தினை வேண்டிக் கொண்டது அறிவினைத்தான். அவர் காலமெல்லாம் கருத்தில் கொண்டு உழைத்தது மனித சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கும் அறிவு பயனுக்கும்தான். அவர் எழுத்துக்களில் மேடைப் பேச்சுக்களில் முதல் வாக்கியமாக விளங்கியது. ''பேரன்பு மிக்க பெரியோர்களே, தாய்மார்களே! நான் சொல்வதை உங்கள் அறிவுகொண்டு அலசி ஆராய்ந்து பாருங்கள். உங்கள் அறிவுக்கு சரி என்று படுவதை ஏற்று அல்லாததை தள்ளி விடுங்கள்'' என்பதுதான்.

மனித இனத்திடையே நம்பிக்கைகளை வளர்த்து நம்பிக்கை மோசடியும், நம்பிக்கை துரோகமும் புரிந்து மனிதர்களை ஏமாற்றவும் சுரண்டவுமாக மனிதன் கண்ட நீண்ட சரித்திரத்தில் அறிவுக்கு வேலை கொடு, உன்னையே நீ நம்பு, உன் அறிவையே நம்பு என்று பிரசாரம் செய்து, பாடுபட்ட பெரியோர்களில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த புத்தரைத் தவிர, தந்தை பெரியார் மட்டும் தான் ஒப்புவமை இல்லாத பெருந்தொண்டராக உயர்ந்து நிற்கின்றார். மனித அறிவின் சக்தியை தெளிவாக உணர்ந்து அறிவின் விடுதலையில்தான் மனிதனின் உயர்வும், சுரண்டலின் முடிவும் இருக்கின்றன என்பதைத் தீர்க்கமாக உணர்ந்து உழைத்த சரித்திர நாயகர் தந்தை பெரியார் அவர்கள் மட்டுமே.

மனித அறிவு அவ்வளவு கூர்மையானது. மனித மூளை—பரிணாமத்தின் உச்சக் கட்டம் என்று சொல்லும் அளவுக்கு அவ்வளவு வியத்தகு சக்திகளை உடையதாக இருக்கின்றது. நிரம்ப அயோடின் சத்துகளும், சுமார் முக்கால் கிலோ எடையும், 1400 கோடி நுண் அணுக்களையும் கொண்ட மனித மூளை பிரம்மாண்டமான சக்தி படைத்த

தாக இருக்கும். ஒரு மின் - ரசாயன கருவியாகும். (Electro Chemical Equipment) இதன் சக்தியின் ஆரம்பமும் முடிவும் அறுதியிட்டுக் கூறமுடியாத அளவுக்கு விரிந்து கிடக்கின்றது. மனித மூளை போன்ற ஒரு எந்திர கம்ப்யூட்டரை நிர்மாணிப்பதற்கு 15,000 ஏக்கர் நிலமும், இருபது மில்லியன் வாட் மின்சாரமும், பதினைந்து மில்லியன் டாலர் பணமும் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

மனித மூளையின் சாதனைகள் மனித சரிந்திரமே ஆகும். இந்த சாதனைப் பட்டியல்களை எழுதிக்காட்டுவது மனித சரித்திரத்தையே திருப்பி எழுதிக் காட்டுவதேயா கும். மனித நாகரீகத்தில் ஏற்பட்ட அடிப்படை கண்டுபிடிப்புகள் மொழி, எழுத்து, எண், விவசாயம், சமையல், நெருப்பு, சக்கரம், பூஜ்யம் ஆகிய அனைத்தும் மனித மூளைகள் சாதித்த மாபெரும் சாதனைகள். மேலும், நாம் சற்றே சுற்றிப் பார்வையிட்டால் நாம் காணுகின்ற சகல பொருள்களும் மனிதனின் கைவண்ணம்பட்ட மண்ணும், கல்லும், மரமும், உலோகமுமே என்பது விளங்கும். இருபது ஆண்டுகளுக்கு முன்பு கேட்ட மெல்லிய ரகசியமும், இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த துல்லிய விவரங்களும், இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் நடக்கும் நிகழ்ச்சிகளின் நேரடிப் பார்வையும் நமக்குத் தெளிவாகத் தெரிவது மனித அறிவின் சாதனையே. பைபிள் புத்தகத்தை பாராயணம் செய்ததும், கப்பிப்பாதைகளில் நடந்து காட்டியதும், தண்ணீரில் மூழ்கி, தரையில் புதைந்துப் புதிய சாதனைகள் ஏற்படுத்தியதும் கூட மனித அறிவின் வக்கரித்த சாதனைகளே.

மனிதன் என்ற விலங்கு பாதுகாப்புப் போர்வைகளை முதுகில் சுமக்கவில்லை; தற்காப்புக் கருவிகளை தோளில் புதைத்துக் கொண்டு முள்ளம் பன்றிகளாக விளங்கவில்லை, பறக்க இறக்கைகளும், ஓட சக்கரமும் கட்டிக் கொள்ள வில்லை என்றால் இந்த அத்தனைக் கருவிகளையும் படைத்து, இயக்கும் சாதனையைச் சுருக்கி மனிதன் மூளையாக, அறிவாக அமைத்துக் கொண்டு விட்டான் என்பதனால்தான். சென்ற 10 லட்சம் ஆண்டுகளில் மனித பரிணாம வளர்ச்சியில் ஒரு எலும்பு குறைதல் அல்லது ஒருசதை வளர்தல் என்ற எந்த மாறுதலும் ஏற்படவே இல்லை. மனிதனைப் பொறுத்தவரை பரிணாமம் முடிவடைந்து விட்டதோ என்றுகூட விஞ்ஞானிகள் எண்ணத் தோன்றியிருக்கிறார்கள் என்றால் அது மனித மூளையின் மாபெரும் வரிசையான செயல் திறன்களால் தான். காற்றில் பறக்கவும், கடலில் மிதக்கவும், குளிரில் வாழவும், வெய்யிலில் அலையவும் மனிதன் சாதனங்களை சாதிக்க முடிகின்ற ஒன்றுமட்டுமே பரிணாம பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு கண்டுவிட்டது என்று சொல்லலாம். கருவி கருவி என்று மனிதன் செய்யும் கருவிகளின் திறமைக்கு அடிப்படையானது மனித அறிவேயாகும்.

மனிதனின் ஒரு கேடான வாய்ப்பு என்னவென்றால் — வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் கருவி செய்யும் திறமைகளைப் பெற்ற அவன், அறிவினை மயக்கவும் சில சமயம் கருவிகளைச் செய்தான் என்பதுதான். புகையிலையும், கஞ்சாவும், கள்ளும் சாராயமும் — நடைமுறையில் சில மணிகள் அறிவினை மயக்குவது மட்டுமல்ல; அரசியலும், கம்யூனிசமும், மதமும், சாதியும் நீண்ட காலம் மயக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்ல — மனித இனத்தின் பெரும் பெரும் பகுதிகள் நீண்ட சரித்திர காலங்களுக்குள் மயங்கிக் கிடக்க வேண்டிய சோகமான வளர்ச்சிகள் கூட அறிவின் மயக்கத்தால் ஏற்பட்டன. உலகத்தின் பெரும் பகுதிகள் முடியாட்சி என்ற மயக்கத்தில் நூற்றுக் கணக்கான ஆண்டுகள் கிடந்தன. உலகின் பெரும் பகுதிகள் இன்றும் தனியுடைமை என்ற மயக்கத்தில் கிடக்கின்றன. இப்படி — பெரும்பான்மை மக்கள் தொகுதியின் பெரும்பான்மை சுபிட்சத்திற்கும், சுகத்திற்கும் வழிகாட்டியிருக்கவேண்டிய

மனித அறிவு, சில சுயநலவேட்கைகளால், சில நோயாளி மனப்பான்மைகளால், சில பேராசை வக்கரிப்புகளால் பெரும்பான்மை மனிதர்களின் பெரும்பான்மை ஏழ்மைக்கும், துன்பத்திற்கும், பட்டினிக்கும், சாவுக்கும் வழிகோலி அவைகளை நிரந்தரமாகவும், கருவிகளை மதம், கடவுள், சாதி, கட்சி, மொழி என்ற பல்வேறு பெயர்களில் வடித்து கொடுமைகளை விளைத்தது, விளைக்கின்றது.

எனவே, பயிற்சிமுகாம் காண வந்திருக்கும் இளைய சகோதரர்களே, சகோதரிகளே! நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியது, நன்மைகளை அறிவு சாதிக்கும் என்பது மட்டுமல்ல தீமைகளையும் அறிவு சாதிக்க முடியும் என்பதையும் தான். பெரும்பான்மை மக்களின் வாழ்வும் வளமும் நன்மை என்றும் அது அல்லாதது தீமை என்றும் கொள்ள வேண்டும் வாழ்க்கையில் நடைமுறையில் பிரச்சினை தீர்ப்பதில் அறிவுப் பூர்வமான அணுகுமுறை ஒவ்வொரு மனிதனுடைய பிறப்புரிமை, அது என்ன காரணங்களுக்காகத் தவிர்க்கப்பட்டாலும் ஒத்திவைக்கப்பட்டாலும் அங்கே ஏதோ ஓர் அடிமைத்தனம் இருக்கின்றது என்பதை உணர்ந்து அதைக் களையப் பாடுபடவேண்டியதுதான். அறிவுலகத்தின் பல கருவிகளையும் மனிதன் கையாள தகுதிபெற வேண்டுமானால் முதலில் அறிவு தூசி தட்டப்பட்டு, அழுக்கு நீக்கப்பட்டு, ஒளியேற்றப்பட வேண்டும். சுதந்திர சிந்தனையும், ஆராய்ச்சி மனப்பான்மையுமே அறிவுக்கு ஒளியேற்ற முடியும் அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று இல்லாமல் நமது அறிவு என்ன சொல்லுகின்றது என்று எண்ணிச் செயல்படுவதே நமக்கு நாமே செய்துகொள்ளும் நியாயமாகும். நம்மைவிட கல்வி கேள்வியிலும், அறிவு உபயோகத்திலும், நல்லெண்ணத்திலும் மோசமானவர்கள் சொல்லுகின்ற உபதேசங்களை மிகவும் தீவிரமாக ஆராய வேண்டியது அவசியமாகும். எப்படியானாலும் கண்மூடித்தனமான நம்பிக்கை, அறிவுக்குச் செய்யும் துரோகம் என்பதை உணருங்கள்.

—26—5—1978 "விடுதலை"

# நமது குழந்தைகளைப் பயிலுவோம்

நமது குழந்தைகளின் உணர்வுகளையும், அவ்வுணர்வுகள் உருவாவதற்கான சரியான காரணங்களையும், உணர்வு வெளிப்பாடுகளையும் நாம் அறிந்திருத்தல் இன்றியமையாதது ஆகும். பெருமளவில், குழந்தைகள் பள்ளிக்கு செல்ல துவங்கும் அந்த துவக்க நாட்களில் தான் உணர்வு வெளிப்பாடுகளை நாம் உணரத்துவங்குகிறோம்.

அவற்றில் பல நமது கவலைக்குரியன : குழந்தைகளின் எதிர்காலத்தில் மாற்றவியலாத பல நல்ல விளைவுகட்கும் தீயவிளைவுகட்கும் அடிப்படைகளாக அமைந்து விடுவனவும் கூட எனலாம். இவற்றை தேர்ந்த உளவியல் வல்லுநர்கள் தான் தீர்க்க முடியும் என்றில்லை வருமுன் காக்கும் விழிப்பு மற்றும் பொறுப்பு உணர்வுடன் செயலாற்றும் பெற்றோர்கள் நிறைந்த அளவில் பயன் விளைவிக்க முடியும். அந்த வகையில் சில குறிப்புகளை வழங்குகிறோம். இது ஒரு நல்ல விவாத மேடையாகக் கூட பரிணமிக்கலாம்; பரிணமிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்; உங்கள் கருத்துக்களையும் அனுபவங்களையும் எழுதுங்கள்; பகுத்தறிவு வழியில் குழந்தைகளை பயிலுவோம்; பயிற்றுவோம்.

பள்ளி செல்லும் பருவத்தில் பிரிவுத்துயிர் குழந்தையை பெரிதும் தாக்கும். இப்பிரிவினை பொருட்படுத்தாமலும் அதே நேரம் குழந்தைகளின் பள்ளி அனுபவங்களை பெற்றோர் திட்டமிட்டு குழந்தைகளின் வாயிலாகவே பகிர்ந்து கொண்டு உற்சாகப் படுத்துவதின் வாயிலாகவும் இதனை தவிர்க்கலாம் மழலையர் பள்ளி ஆசிரியர்களும் அறிவியல் நோக்கில் இப்பிரிவுத் துயரினை ஈடு செய்யும் வண்ணமாக அன்பு செலுத்துபவர்களாக இருத்தல் வேண்டும்.

—தொடரும்.

## பயன்மிக்க சில பொது நிகழ்வுகள்

**திங்கள் தோறும்**

*இரண்டாம் சனிக்கிழமைகளில்*

''பகுத்தறிவுச் சொற்பொழிவுகள்''

*இடம் :* **கரந்தை தமிழ்ச் சங்க வளாகம்**

*அமைப்பு :* **பகுத்தறிவாளர் கழகம்**

**தஞ்சாவூர்**

காலம் : 11 – 4 – 87 சனி மாலை 6-00 மணி

தலைமை : தோழர். க. பிரேமையன் க இ,

*பொருள் :* **''தமிழகமும் மார்க்சீய சிந்தனையும்''**

*சிறப்புரை :* **தோழர் பெ. மணியரசன்**

குறித்த நேரத்தில் பங்கேற்றுப் பயன் செய்க

---

முதல் மற்றும் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமைகளில் 'குறள் நெறித் தொடர்ச் சொற்பொழிவுகள்'

*இடம் :* **தமிழ்ச்சங்கம் கரந்தை**

*காலம் :* மாலை 5. 00 மணி

*நாள் :* 5—3—87

**பேராசிரியர் சு. தங்கமுத்து மு. க.,**

**ஆய்வியல் நிறைஞர்**

''உழவு''

19—3—87

**பேராசிரியர். மோ. தமிழ்மாறன். மு. க.,**

**ஆய்வியல் நிறைஞர்**

''ஆள்வினையுடைமை''

*மூன்றாம் திங்கட்கிழமையில்..........*

மருத்துவ சொற்பொழிவு

*இடம் :* பெசன்ட் லாட்ஜ்

*நாள் :* 20—4—87 மாலை 6–00 மணி

டாக்டர் கே. தருமராஜன் M.S., M.C.H., M.N.A.M.S

*பொருள் :* சிறுநீரகக் கற்களால் விளையும் சீரழிவுகள்

*அமைப்பு :* **இந்திய மருத்துவக் கழகம்**

**தஞ்சாவூர்**

---

சமுதாய உணர்வு மிக்க மருத்துவர் என். மோகன்தாஸ் எம். டி அவர்களின் அன்னையார் பட்டம்மாள் என்கிற கமலாம்பாள் அம்மையார் கடந்த 24—3—87ல் இயற்கையடைந்தார்கள். அன்னாரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பகுத்தறிவாளர் கழகம்-தஞ்சாவூர்

---

அவிழ்-மடல்

அடைதல்

*முகவரியாளரிடம் ஒப்படைத்திடவியலாவிடத்து அருள் கூர்ந்து பின்வரும் முகவரிக்கு மீள அனுப்புக.*

தோழர் ____________________

____________________ அவர்கள்,

____________________

அ. கு. எண் : ____________________

**பகுத்தறிவாளர் கழகம்,**
483, கீழ அலங்கம்,
**தஞ்சாவூர்-613 001.**

**RATIONALISTS' FORUM**
488, East Ramport,
THANJAVUR-613 001.
Thamil Naadu.